ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௪. பிரபவஹு கார்த்திகை பகுதி ௧௧.

Vol 4. *November & December 1927.* No. 11.

கீதார்த்த ஸங்க்ரஹம்.

ஸ்ரீய:பதியாய், ஸகலலோகங்களையும் படைப்பதும் காப்பதும் அழிப்பதுமான இவற்றை விளையாட்டாகவுடையவனாய், நாராயண சப்தவாச்யனாகிய ஸர்வேச்வரன் பிர்ம்மா முதலாக ஸ்தாவரமீறாக வுள்ள ஸகலலோகங்களையும் ஸ்ருஷ்டித்துத் தன் அபாரகருணையால் பிர்ம்மலோக முதலிய லோகங்களில் தன்னுடைய அஸாதாரண திவ்யமங்களவிக்ரஹத்தையே தன் ஸ்வபாவம் மாறாதபடி தேவ ஜாதியனாக வந்தவதரித்து அவர்களால் ஆராதிக்கப்பட்டு அவ்வவரின் இஷ்டத்துக்குத் தக்கபடி தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷங்களைக் கொடுத்துப் பூபாரத்தைத்தீர்க்க வேண்டுமென்று உலகில் யாவருங்கண்டு பற்றும்படி திருவாய்ப்பாடியில் கண்ணனாய் வந்தவதரித்தான். அப்பொழுது துஷ்டவர்க்கங்களாகிய பூதனை, சகடம், யமளார்ச்சுநர், அரிஷ்டன், பிரலம்பன், தேநுகன், காளியன், கேசி, குவலயாபீடம், சாணூரமுஷ்டிகர், கம்ஸன் முதலானோரை அழித்து ஜகத்தை வாழ்வித்துப் பஞ்சபாண்டவர்களை யுத்தத்தில் புகச்செய்வதென்கிற வ்யாஜத்தால் வேதாந்த ஸாரார்த்தமான கீதையை வெளியிட்டான்.

இந்தக் கீதையில் சேதனருக்குக் கர்மாநுகுணமாக வுண்டாகின்ற ருசிபேதங்கட்குத் தகுதியாகப் பலவுபாயங்கள் நிறைந்து

விளங்குகின்றன. அவையாவன:— கர்மஜ்ஞாநபக்திகள், அவதார ரஹஸ்யஜ்ஞாநம், புருஷோத்தமவித்யை, ஸ்வரூபத்தின் உண்மை, விரோதிநிவர்த்திக்கு ப்ரபத்தி, பகவல்லாபத்திற்கு ப்ரபத்தி என்பனவாம். இவை பின்னர் முறையாக வுரைக்கப்பெறும்.

அர்ஜுனன் யுத்தகளத்துப் புகுந்துநின்று தன்னால் கொல்லப்படுமவர்கள் பந்துக்களாகவும் ஸிநேகிதர்களாகவும் குருமார்களாகவுமிருக்கக்கண்டு அந்தோ! இவர்களைக் கொன்றோ நாம் ராஜ்யபரிபாலனஞ் செய்வதென்று தர்மாதர்மங்களின் பாகுபாடறியாமல் யுத்தஞ் செய்வதினின்றொழிந்து நின்றான். அப்பொழுது கண்ணபிரான் அர்ஜுனனை நோக்கி (1) ராஜ்யம் பந்துக்கள் முதலியவற்றில் பற்றையொழித்து யோகநிஷ்டனாய், அஃதாவது:— யுத்தாதிகளில் ஜயம் முதலியது கிடைத்தாலும் கிடையாவிட்டாலும் அதனால் மனம் சலியாமல் ஒரேமனதாயிருந்து யுத்தாதிகர்மங்களைச் செய்யக்கடவாய். (இங்கே யோகமென்றது ஸித்தி அஸித்திகளில் மனந்தாழாமையை யுணர்த்தும்.) (2) இந்தப் புத்தியோகத்துடன் கூடிச்செய்கிற கருமத்தைத்தவிர மற்றக்கருமமெல்லாம் மிகவும் இழிவானது. ஏனெனில் இது பரமசுககரமான மோக்ஷத்தைத்தருமது. மற்றையது நித்யதுக்கமான ஸம்ஸாரத்தைப் பயப்பது. ஆகையால் மேற்சொல்லப்பட்ட புத்தியை விடாமலிருப்பாய். பலனைடைவதில் விருப்பத்தோடு கர்மம் செய்பவர்கள் ஸம்ஸாரத்தில் கட்டுண்பர்கள்; என்று பலவாறாக உபதேசித்தான்.

---

(1) யோகஸ்த: குருகர்மாணி ஸங்கம் த்யக்த்வா தநஞ்ஜய।
ஸித்த்யஸித்த்யோஸ்ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே॥

யோகஸ்த: குருகர்மாணி ஸம்கம்த்யக்த்வா தநஞ்ஜய
ஸித்யஸித்யோஸ்ஸமோபூத்வா ஸமத்வம் யோகஉச்யதே.

(2) தூரேண ஹ்யவரம் கர்ம புத்தியோகாத் தநஞ்ஜய।
புத்தௌ ஶரணமந்விச்ச க்ருபணா: பலஹேதவ:॥

தூரேணஹ்யவரம்கர்ம புத்தியோகாத்தநஞ்ஜய
புத்தௌஶரணமந்விச்ச க்ருபணா: பலஹேதவ:

இதைக்கேட்ட அர்ஜுனன் ஸ்வாமி! (3) மனமானது ஸ்வபாவமாகவே சஞ்சலமுள்ளதாகவும், அடங்காததாகவும், விஷயங்களை வலிமையாகப் பற்றுதலுடையதாகவு மிருக்கின்றது. இதை யடக்குவதென்றாலோ காற்றைப்பிடித்துக் கரத்திலடக்குவதுபோல அஸாத்யமான கார்யமாகுமென்று கருதுகிறேனென்றான். அப்பொழுது கண்ணபிரான் (4) விஷயத்தில் ஆசையுற்றுச் செல்கிற இந்திரியங்களையடக்கி மனதுக்கு க்ஷேமஸ்தானமான என்னிடத்தில் மனதை நிறுத்திச் சலனமில்லாதிருக்கக்கடவன். மனது என் வழியில் திரும்பினபொழுதே ஸகலபாபமும் தொலைகின்றமையால் அது நிர்மலமாய் இந்திரியங்களையும் தன் வசப்படுத்திக்கொள்ளும். இந்திரியங்கள் தன் வசப்படுமேல் ஆத்மஸாக்ஷாத்காரம் தன்னடைவே ஸித்திக்கும்.

மேலும், ஜ்ஞானயோக அதிகாரிக்கும் கர்மமே சிறந்ததின்றலன்றே (5) ஜ்ஞானிகளில் தலைவரான ஜநகாதிராஜரிஷிகளும் கர்மயோகத்தினாலே ஸித்திபெற்றிருக்கிறார்கள். ஆதலால் நீ ஜனங்களுடைய பிரயோஜனத்தைக் கருதியாவது கர்மத்தைச் செய்வதற்கு

---

(3) 𑌚𑌞𑍍𑌚𑌲𑌂 𑌹𑌿 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌿 𑌬𑌲𑌵𑌦𑍍𑌦𑍃𑌢𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑌾𑌯𑍋𑌰𑌿𑌵 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍 ॥

சஞ்சலம்ஹிமந: க்ருஷ்ண ப்ரமாதிபலவத்ருட:
தஸ்யாஹம் நிக்ரஹம்மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்.

(4) 𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯𑍁𑌕𑍍𑌤 𑌆𑌸𑍀𑌤 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 ।
𑌵𑌶𑍇 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥

தாநிஸர்வாணிஸம்யம்ய யுக்தஆஸீதமத்பர:
வசேஹியஸ்யேந்த்ரியாணி தஸ்யப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா.

(5) 𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 ।
𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑍇𑌵𑌾𑌪𑌿 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

கர்மணைவஹிஸம்ஸித்தி மாஸ்திதாஜநகாதய:
லோகஸம்க்ரஹமேவாபி ஸம்பச்யந் கர்த்துமர்ஹஸி.

யோக்யனாயிருக்கிறாய். (6) இப்பொழுது என்னால் உபதேசிக்கப்பட்ட இந்த யோகமானது உன்னை யுக்தத்தில் புகவிடுதற்காக உரைத்ததாக நினைக்கவேண்டா. மந்வந்தரத்தின் ஆதியில் ஸகல லோகமும் கடைத்தேறும் நிமித்தம் மோக்ஷஸாதனமாக இதை நான் ஸூர்யனுக்கு உபதேசித்தேன். அவன் மநுவுக்கும், அவன் இக்ஷ்வாகுவுக்கும் சொல்ல (7) இது பரம்பரையாக வந்தது. இதை ராஜரிஷிகளெல்லாமறிவார்கள். கேட்பவரின் புத்திக்குறைவினால் வெகு காலத்திற்கு முன் நஷ்டமாய் விட்டது (8) இதையே இப்பொழுது சிறிதும் தவறாதபடி எனக்குத் தோழனாய் என்னிடத்தில் மிகவும் பக்தியுடன் என்னையே தஞ்சமாகப் பற்றினவனாயிருக்கிற உனக்கு விரிவாகச்சொன்னேன். இது, வேதாந்த ரஹஸ்யமாதலால் என்னையல்லது மற்றொருவராலும் சொல்லும் திறத்ததன்று; என்று அருளிச்செய்தான்.

இதைக்கேட்ட அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி (9) ஸ்வாமி! காலத்தின் கணக்கைப் பார்த்தால் அடியேன் பிறந்த ஸமகாலத்திலே

---

(6) 𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍।
𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌮𑌨𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑌨𑍁𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

இமம்விவஸ்வதேயோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம்
விவஸ்வாந் மநவேப்ராஹ மநுரிக்ஷ்வாகவேப்ரவீத்.

(7) 𑌏𑌵𑌂 𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃।
𑌸 𑌕𑌾𑌲𑍇𑌨𑍇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪॥

ஏவம்பரம்பராப்ராப்த மிமம்ராஜர்ஷயோ விது:
ஸகாலேநேஹமஹதா யோகோநஷ்ட: பரந்தப.

(8) 𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃।
𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌸𑌖𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥

ஸஏவாயம்மயாதேத்ய யோக: ப்ரோக்த: புராதந:
பக்தோஸிமேஸகாசேதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம்.

(9) 𑌅𑌪𑌰𑌂 𑌭𑌵𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃।
𑌕𑌥𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿॥

அவரம் பவதோஜந்ம பரம்ஜந்ம விவஸ்த:
கதமேதத்விஜாநீயாம் த்வமாதௌ ப்ரோக்தவாநிதி.

தான் தேவரீரும் அவதரித்ததாகத் தெரிகிறது. 'இங்ஙனமிருக்க ஆதியில் ஸூர்யனுக்குத் தேவரீர் கர்மயோகத்தை உபதேசித்த தாகச் சொன்னால் அதை எங்ஙனம் நம்புவது. * என்று கேட்ட வுடன் அவதார ரஹஸ்யத்தை உபதேசிக்கத் தொடங்கினான். (10) அர்ஜுந! எனக்கும் உனக்கும் பல ஜந்மங்கள் கழிந்தன; ஆனால் அவையெல்லாம் எனக்குத் தெரியும்; உனக்குத்தெரியாது. † இன்னும் (11) பிறப்பில்லாமை, அழிவில்லாமை, ஸர்வேசுவரத்வம் என்கிற பரமேசுவரன் தன்மைகளில் ஒன்றும் விடாமல் ஸ்வரூபத்துடன் என் இச்சையினால் அவதரிக்கிறேன்.

---

* மஹான்களாயுள்ள பெரியோர்கள் ஜந்மாந்திரத்தின் விருத்தாந்தத்தையறிந்து சொல்லக்கூடும். கண்ணபிரான் மஹானென்றும், ஸர்வேசுவரனென்றும் ராஜசூயயாகத்தில் பீஷ்மாதிகளால் சொல்லக்கேட்டுத் தெளிந்த அர்ஜுனன் இங்கு ஒன்றுந்தெரியாததுபோலக் கேட்பதை ஆராய்ந்துபார்த்தால் எம்பெருமானுக்குக் கர்மாதீனரான மனுஷ்யர்களோடொத்திருக்கும் ஜந்மம், இந்திரஜாலம் போலமாயமா? அல்லது ஸத்யமா? ஸத்தியமானால் ஜந்மத்தின் ப்ரகாரமென்ன? எப்பொழுது ஜன்மம்? எதற்காக எடுத்ததென்கிற சங்கைகளைப் பரிகரிக்கக் கேட்டதாகத் தெரிகிறது.

(10) 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌮𑍇 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌚𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌤𑌾𑌨𑍍𑌯𑌹𑌂 𑌵𑍇𑌦 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌪𑌰𑌂𑌤𑌪 ॥
பஹூநிமேவ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந
தாந்யஹம்வேதஸர்வாணி நத்வம் வேத்த பரந்தப.

† இங்கு உனக்குமென்று அர்ஜுனன் ஜன்மத்தைத் திருஷ்டாந்தமாகச் சொல்லுகையாலே எம்பெருமானுடைய அவதாரம் ஸத்யமென்றதாயிற்று. இதுநிற்க; கண்ணபிரான் அர்ஜுனன் கேட்டதற்குப் பதில் தன்னுடைய ஜன்மத்தை மாத்திரம் சொல்லவேண்டிய முறையிருக்க அவனுடைய ஜந்மத்தையுஞ் சொல்லி 'நானறிவேன்; நீ யறியாய்' என்று சொல்லியதின் உத்தேசம் யாதெனின்; ஜீவாத்மா பரமாத்மாக்களின் பேதத்தை யுணர்த்துவதற்காக இங்குக் கண்ணபிரான் தன்னைச்சுட்டி 'நானறிவேன்' என்று பரப்ரஹ்மமாகிய தன்னுடைய ஆற்றலுடைமையையும், 'நீ யறியாய்' என்று ஜீவனுடைய ஆற்றலின்மையையும் விளக்கிக்காட்டினானென்று கொள்ளத்தக்கது.

(11) 𑌅𑌜𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌨𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 ॥
அஜோபிஸந்நவ்ய யாத்மா பூதாநா மீச்வரோபிஸந்
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்ம மாயயா.

(12) அவதரிப்பதற்கு ஒருகாலநியமமில்லை வேதத்திற்சொல்லப்பட்ட வர்ணாச்ரம தர்மங்கட்கு வாட்டமுண்டாய், எங்கெந்தச் சமயத்தில் அதர்மத்திற்குக் கிளர்ச்சியுண்டாகுமோ அந்தந்தச் சமயத்தில அவதரிக்கிறேன். (13) இந்த அவதாரத்திற்கு ஸாதுக்களின் ரக்ஷணமும், துஷ்டர்களின் சிக்ஷையும், தர்மஸ்தாபநங்களுமே ப்ரயோஜனங்களாயிருக்கும்.

(14) கர்மாதீனமாய் ப்ரக்ருதிஸம்பந்தரூபமாயிருக்கிற ஜந்மமில்லாதவனும் ஸர்வேசுவரத்வம், (எல்லா ஐசுவர்யங்களையுமுடைத்தாயிருக்குந்தன்மை) ஸர்வஜ்ஞத்வம், (எல்லாமறியுந்தன்மை) ஸத்யஸங்கல்பத்வம் தொடக்கமான ஸமஸ்தகல்யாண குணாத்மகனுமாயிருக்கிற எனது ஸ்வரூபமும வ்யாபாரமும் அப்ராக்ருதமாய் எனக்கே இன்றியமையாததாயிருக்குமென்று எவன் உள்ளபடி அறிகிறானோ? அவன் அப்பொழுதுண்டான தேகத்தை விட்டவுடன் மறுபடியும் ஜன்மமெடுக்காமல் என்னையே அடைகிறானென்று கர்மயோகத்தை அருளிச்செய்து வருகிற பத்தியில அர்ஜுனன் கேட்ட கேள்விக்குப் பதில் கூறுகிற க்ரமத்தில் அவதாரரஹஸ்யத்தை யருளிச்செய்தான்.

---

(12) 𑌯𑌦𑌾𑌯𑌦𑌾𑌹𑌿𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

யதாயதாஹிதர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்.

(13) 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯𑌚𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 ।
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿𑌯𑍁𑌗𑍇𑌯𑍁𑌗𑍇 ॥

பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயசதுஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே.

(14) 𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌚𑌮𑍇𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍇𑌵𑌂𑌯𑍋𑌵𑍇𑌤𑍍𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ।
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌹𑌂𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨𑍈𑌤𑌿𑌮𑌾𑌮𑍇𑌤𑌿𑌸𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ॥

ஜந்மகர்மசமேதிவ்ய மேவம்யோவேத்திதத்வத:
த்யக்வாதேஹம்புநர்ஜந்ம நைதிமாமேதிஸோர்ஜுந.

அதன்பிறகு கண்ணபிரான் அர்ஜுனனைப்பார்த்து (15) கர்மம் திரவியத்தாலும் ஜ்ஞாநத்தாலும் ஸாதிக்கவேண்டுகையால் அது இரண்டம்சமாகவன்றோ விருக்கிறது. அவற்றுள் திரவியமயமான அம்சத்தைக் காட்டிலும் ஜஞாநமயமான அம்சந்தான் சிறந்தது. ஏனெனில் ஸகலகர்மங்களும் மற்றவையும் முடிவில் ஜ்ஞாநத்தைக் கொண்டே முடிகின்றன அஃதாவது:—எந்த ஸாதனத்தை அநுஷ்டித்தும் பெறவேண்டியது ஆத்மஸாக்ஷாத்காரமாம். அது கர்மம் செய்யத் தொடங்கியநாள் முதல் அப்யஸிக்கப்பட்டுவந்து கடைசியில் அதுவே ஸாக்ஷாத்கார ஜ்ஞாநமாய்ப் பழுக்கிறது. இப்படியான பின்பு கர்மத்தில் திரவியாம்சத்தைக் காட்டிலும் ஜ்ஞாநாம்சம் சிறந்ததென்னக் குறையில்லை; என்றான்.

இதைக்கேட்ட அர்ஜுனன், ஸ்வாமி! தேவரீர் இதுவரையில் அருளிச்செய்ததில் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு ஜ்ஞாநநிஷ்டை நேரான ஸாதனமென்றும், கர்மநிஷ்டையானது அந்த ஜ்ஞாநநிஷ்டையை யுண்டாக்கித் தருமென்றும் அந்த ஜ்ஞாநநிஷ்டையும் எல்லா இந்திரிய வியாபாரங்களை ஒழித்தே பெறவேண்டியதென்றும் பெறப்பட்டன. இதனால் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கும் விஷயத்தில் கர்மநிஷ்டையைக்காட்டிலும் ஜ்ஞாநநிஷ்டையே சிறந்ததென்று தேவரீர் திருவுள்ளம் பற்றியதாகத் தெளிவாகிறது. இங்ஙனமாகில் அடியேனுக்கு முன்னதாக ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெறும் உபாயத்தை அருளிச்செய்யாமல் அதற்கு விரோதமாக இந்திரிய வியாபாரரூபமான கர்மயோகத்தைச் செய்யும்படி நியமித்தீரே. இதை நோக்கினால் ஒன்றுக்கொன்று விரோதமான வாக்யங்களைச் சொல்லி அடியேனைக் கலங்கச்செய்வதுபோலத் தோற்றுகிறது. ஆகையால் இனியாவது அடியேனுடைய க்ஷேமத்தை முன்னிட்டு அடியேன் செய்யவேண்டியதை நிச்சயித்துக்கொள்ளும்படி அரு

---

(15) [illegible]
[illegible]

ச்ரேயாந்த்ரவ்யமயாத்யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ:பரந்தப
ஸர்வம்கர்மாகிலம்பார்த்த ஜ்ஞாநேபரிஸமாப்யதே.

சிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்பொழுது கண்ண பிரான் அர்ஜுந! நான் முன்னர்க்கூறியதை நீ செவ்வையாக அறிந் திலைபோலும். உலகத்தில் ஜநங்களுக்கு யோக்யதை பலவிதமாக விருக்கிறபடியால் ஜ்ஞாநநிஷ்டை, கர்மநிஷ்டை என்ற இரண்டுண் டென்று சொன்னேன். விஷயத்தில் வியாகுலமான புத்தியுடை யோருக்குக் கர்மயோகத்தில் அதிகாரமுண்டென்றும், ஆத்மா வையே நாடுகிற புத்தியுடையோருக்கு ஜ்ஞாநயோகத்தில் அதிகார முண்டென்றும் பிரித்து உணர்ந்து கொள்ளவேண்டும். நான் விரோதமாகச் சொன்னதாகக் கருதவேண்டா. இதுநிற்க;

ஜ்ஞாநத்தினாலேதான் என்னுடைய உண்மையான நிலைமை யறியலாம். நான் எல்லாபூதங்கட்கும் காரணமாகவிருக்கின்றேன்; பூதங்களுள் ஒன்றாகிலும் அந்தராத்மாவாகிய என்னையொழியத் தரிப்பதில்லை. எல்லாவஸ்துக்களும் எல்லாநிலைகளிலும் அந்தராத்மா வாகிய என்னோடு கூடியேயிருக்கும். இதனால் எல்லாப்பொருள்களும் என்னுடைய ஸ்வரூபங்களென்று வ்யவஹரிக்கப்படுகின்றன. எல் லாப்பொருள்களும் என்னால் தரிக்கப்படுகின்றன வென்பதில் உனக் குச் சந்தேகம் நிகழக்கூடும். அது உண்டாகாதிருக்க இப்பொழுது (16) என்னுடைய ஓருருபத்தில் பன்னிரு ஸூர்யர்களையும், அஷ்ட வசுக்களையும், பதினொரு ருத்ரர்களையும் இரண்டு அசுவினிதேவதை களையும், வாயுக்களையும், இப்படியே லோகத்தில் ப்ரத்யக்ஷமாய்க் காணக்கூடியவைகளையும், சாஸ்திரத்தாலறியக் கூடியவைகளையும், எங்கெந்த லோகத்தில் எங்கெந்த ஆச்சர்யமுண்டோ அவையெல்லா வற்றையும் பார்ப்பாய். இன்னும் (17) என்னுடைய சரீரத்தில் ஓரிடத்தில் சேதநாசேதனரூபமான உலகத்தையெல்லாம் நன்றாய்க் காண்பாய். மேலும் ஏதாவது பார்க்கவேண்டுமென்று விரும்பினால் அங்ஙனமே செய்வாய். இதுநிற்க; (18) முற்கூறியபடி என்னுடைய

(16) பஶ்யாதி3த்யாந்வஸூந்ருத்3ராநஶ்விநௌ மருதஸ்ததா2 ।
ப3ஹூந்யத்3ருஷ்டபூர்வாணி பஶ்யாஶ்சர்யாணி பா4ரத ॥

பச்யாதித்யாந்வஸூந்ருத்ரா நச்விநௌமருதஸ்ததா
பஹூந்யத்ருஷ்டபூர்வாணி பச்யாச்சர்யாணிபாரத.

சரீரத்தில் எல்லாவற்றையும் காட்டுகிறேன். நீயோ சிறியனவாய் அளவுள்ள வஸ்துக்களைக் காணவல்ல இந்த மாம்ஸநேத்திரங்களைக் கொண்டு எல்லா வஸ்துக்களிலும் வேறுபட்டு அளவில்லாமலிருக்கும் விஷயத்தைக் காணமாட்டாய். ஆகையால் உனக்குத் திவ்பமான கண்களைக் கொடுக்கிறேன். என்னுடைய அளவற்ற ஜ்ஞாந விபூதி தொடக்கமானவைகளெல்லாவற்றையும் பார்; என்றனன்.

அப்பொழுது அர்ஜுனன் விராட்ஸ்வரூபியான கண்ணபிரானைப்பார்த்து ஸ்வாமி! தேவரீருடைய திருமேனியில் எல்லாத் தேவர்களையும், மற்றுமுண்டான பிராணிகளின் கூட்டங்களையும், அண்டாதிபதியான சதுர்முகப்பிரம்மாவையும், அப்படியே அவனுடைய இச்சாநுவர்த்தியான சிவனையும், தேவரிஷிகள் தொடக்கமான எல்லாரிஷிகளையும், வாசுகி தக்ஷன் முதலான அநேக ஸர்ப்பங்களையும் காண்கிறேன். இன்னும், ஆதிமத்யாந்தமற்றவராய் அளவற்ற ஜ்ஞாநம் பலம் வீர்யம் முதலிய குணங்களையுடையவராய், கணக்கில்லாத கை, கால், கண் முதலிய அவயவங்களையுடையவராய் சந்திரனைப்போல அடுத்தவரைக் குளிரநோக்கிச் சூரியனைப்போல விரோதிகளைச் சுடுகின்ற திருக்கண்களுடையவராய் பற்றியெரியும் காலாக்னிபோல ஸம்ஹாரத்திற்கேற்ற முகங்களோடுகூடியவராய், தேஜஸ்ஸாலே உலகத்தையெல்லாம் தபிப்பிக்கின்ற தேவரீரைப் பார்க்கின்றேனென்றான். அதன்பின்னரும் கண்ணபிரான் ஸர்வ

---

(17) 𑌇𑌹𑍈𑌕𑌸𑍍𑌥𑌂 𑌜𑌗𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯𑌾𑌦𑍍𑌯 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌂।
𑌮𑌮 𑌦𑍇𑌹𑍇 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿॥

இஹைகஸ்தஜகத்க்ருத்ஸ்நம் பச்யாத்யஸசராசரம்
மமதேஹேகுடாகேச யச்சாந்யத்த்ரஷ்டுமிச்சஸி.

(18) 𑌨 𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌶𑌕𑍍𑌯𑌸𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌨𑍇𑌨𑍈𑌵 𑌸𑍍𑌵𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌯𑍋𑌗𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌂॥

நதுமாம்சக்ஷ்யஸே த்ரஷ்டு மநேநைவஸ்வசக்ஷுஷா
திவ்யம்ததாமிதேசக்ஷு: பச்யமேயோகமைச்வரம்.

பரிபூரணனாயிருக்கின்ற தன்விஷயத்திலுள்ள ஜ்ஞாநம் அர்ஜுந னுக்குத் தெளிவடையும் பொருட்டு அவனை நோக்கி நீ எளிதில் விரைவில் கிடைக்கும் ஒப்பற்ற பெரும்பயனாயிருக்கின்ற என்னையே அடையவேண்டுமென்ற எண்ணங்கொள். இங்ஙனங் கொண்டால் தான் என்னிடத்தில் நித்யமாயிருந்து வாழ்வாயென்றருளிச்செய்து பக்தியின் பெருமையையுஞ் சொல்லத்தொடங்கினான்.

அர்ஜுந! (19) வேதங்களை ஓதுவது ஓதுவிப்பது முதலியவை களாலாவது யாகத்தாலாவது ஹோமத்தாலாவது தவத்தாலாவது பக்தியில்லாமல் மற்றெவ்விதத்தாலும் என்னை உள்ளபடி காண்ப தரிது. என்னையே நாடிய பக்தியுண்டானால்மாத்திரந்தான் சாஸ் திரத்தைக்கொண்டு என்னையுள்ளபடி அறியவும், ப்ரத்யக்ஷமாய் ஸேவிக்கவும் கூடும். இந்த பக்தியானது மேன்மேலும் விர்த்தி யடைய வேண்டுமானால் நீ என்னையே சிந்தித்தவனாயிருத்தல் வேண் டும். அங்ஙனமிருப்பையேல் என்னுடைய அநுக்ரஹத்தால் ஸகல பாபங்களையுந் தாண்டிவிடுவாய். இவ்வாறின்றி 'நானே கிருத்யா கிருத்யங்களெல்லாவற்றையும் அறியவல்லேன்' என்று நான் சொன் னதைக்கேட்காதொழிவையேல் அழிந்துவிடுவாய்; என்றருளிச் செய்து புருஷோத்தம வித்தையையும் உபதேசிக்கத் தொடங்கினான்.

அர்ஜுந! க்ஷரனென்றும், அக்ஷரனென்றும் சொல்லப்படும் இவ்விரண்டு புருஷர்களும் உலகத்தில் பிரஸித்தமானவர்கள். இவர் களுள் க்ஷரசப்தத்தாற் சொல்லப்பட்ட புருஷன் யாரெனின் ஜீவ சப்தத்தால் சொல்லப்படுமவைகளாய் பிர்ம்மன் முதல் புல்ளளவாய் விகாரப்படுவதே ஸ்வபாவமாயுள்ள அசித்தோடு கலந்திருக்கின்ற பிராணிஸமுதாயம். அக்ஷரசப்தத்தாற் சொல்லப்பட்ட புருஷன் யாரெனின், அசித்தின் ஸம்பந்தத்தைவிட்டு நீங்கித் தானான தன்மை யாயிருக்கும் முக்தஸ்வரூபன். இந்த இரண்டு புருஷர்களைக் காட்டி

---

(19) 𑌨𑌾𑌹𑌂𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨𑌤𑌪𑌸𑌾 𑌨𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾।
𑌶𑌕𑍍𑌯𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿𑌮𑌾𑌂𑌯𑌥𑌾॥
நாஹம்வேதைர்நதபஸா நதாநேந நசேஜ்யயா
சக்யஏவம்விதோத்ரஷ்டும் த்ருஷ்டவாநஸிமாம்யதா.

னும் வேறுபட்டவனுயும், வேதாதிகளால் புகழ்ந்து சொல்லப்படும் புருஷோத்தமனுயுமிருப்பவன் நானேயாவேன். என்னை இவ்வாறறிந்தவன் எவனே அவனே எல்லாம் அறியப்பட்டவனுவான். ஆகலால் நீயும் என்னுடைய புருஷோத்தமத்வத்தையறிந்து கொள்வாயாக; என்றுரைத்து விரோதி நிவர்த்திக்கு ப்ரபத்தியை உபதேசிக்கத் தொடங்கினன்.

பார்த்தனே! எல்லோரையும் ரக்ஷிக்கின்றவனுய், தன்னையடைந்தவனிடத்திலுண்டான அன்பினுல் உன்னுடைய தேர்த்தட்டில் சாரத்யஞ் செய்யுமவனுயிருந்து 'இப்படிச்செய்' என்று நியமிக்கிறுன் யாவனே? அவனையே நீ ஸர்வவிதத்தாலும் சரணமாகப் பற்று. அப்படிச்செய்வையேல் அவனுடைய அநுக்ரஹத்தால் ஸர்வ பாபங்களுமற்று உத்தமமான பரமபதத்தை யடைவாய். பெரியோர்களும், (20) ஸத்வம் ரஜஸ்ஸு தமஸ்ஸு என்கிற முக்குணங்களின் விகாரமான என் மாயையானது என்னுடைய லீலைக்காக என்னுலேற்படுத்தப்பட்டதாகையால் இதைக் கடப்பதற்கு ஒருவராலுமாகாதென்று ஸத்யஸங்கல்பனுய், பெருங்கருணை வள்ளலாய், எல்லாலோகத்தையும் சிறிதும் கைமாறு கருதாமல் காப்பவனுகிய என்னையே உபாயமாகப்பற்றி மாயையைக் கடக்கிறுர்கள்; என்று உபதேசித்து ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பிறப்பித்தான்.

ஏழாவது அத்யாயத்தில் கண்ணபிரான் சேதநுசேதனங்களிரண்டும் எனக்குச் சரீரங்களாயிருக்கு மென்றருளிச்செய்ததையும், இங்கு 'என்மாயையைக் கடப்பதரிது; பெரியோர்கள் என்னையே சரணமாகப்பற்றி அதைக் கடக்கிறுர்கள்' என்று அருளிச்செய்ததையும் அர்ஜுனன் ஆராய்ந்துபார்த்து 'நாம் அவனுடைய சரீரஸ்தானமாக விருக்கின்றேமாதலால் ஸ்வதந்த்ரமாகச் சாதனுநுஷ்டானஞ் செய்தற்கு நமக்கு யோக்யதையில்லை; என்ற உணர்ச்சி அவனுக்குண்டாயிற்று.

---

(20) ദൈവീഹ്യേഷാ ഗുണമയീ മമ മായാ ദുരത്യയാ ।
മാമേവ യേ പ്രപദ്യന്തേ മായാമേതാം തരന്തി തേ ॥

தைவீஹ்யேஷாகுணமயீ மமமாயாதுரத்யயா
மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே.

இதன்மேலும் அர்ஜுனன் கேளாதொழிந்த விஷயத்தையும் தெரிவிக்கத் திருவுள்ளம்பற்றி அர்ஜுந! (21) நீ எனக்கு மிகவும் இஷ்டனாக விருக்கின்றனே யாதலால் ஹிதம் சொல்லுகிறேன் கேட்பா யாக. ரஹஸ்யார்த்தங்க ளெல்லாவற்றுள்ளும் பக்தியோகம் மிகவும் சிறந்ததென்று முன்பே சொல்லப்பட்டது. மறுபடியும் அவ்விஷய மாகவே சிறந்ததொரு வார்த்தை சொல்லுகிறேன். (22) நீ என்னிடத்தில் மிகவும் அன்புடையவனுய், மிகவும் ப்ரீதிரூபமாயிருக்கிற ஸ்மிருதி பரம்பரையைச்செய்; அப்படியே என்னுடைய ஆராதனத்திலே பொழுது போக்காகவிரு; என்னை அன்புடன் வணங்கு; இப்படியிருக்கும் நீ என்னை யடைவாய்; இவை எல்லாவிஷயத்திலும் நான் உனக்குப் பிரதிக்ஞை பண்ணிக்கொடுக்கிறேன். ஸாதாரணமாக ஏதோ உனக்கு இஷ்டமாயிருக்கும்படி சிலவற்றைச் சொன்னதாக நினைக்காதொழிவாய்; என்றுரைத்து இந்தக் கீதாசாஸ்திரத்திற்கு உயிர் ஸ்தாநமாய்ப் பரமரஹஸ்யமாயிருக்கின்ற சரமசுலோகத்தை உபதேசிக்கத் தொடங்கினன். அது வருமாறு:—

𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂𑌵𑍍𑌰𑌜 ।
𑌅𑌹𑌂𑌤𑍍𑌵𑌾𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾𑌶𑍁𑌚𑌃 ॥

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம்சரணம்வ்ரஜ
அஹம்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாசுச:.

என்பதாம். லோகதேசிகன் இந்தச்சுலோகத்தின் பெயர்ப் பொருளை விளக்கவந்தவிடத்து "கீழே சில உபாயவிசேஷங்களை உபதேசிக்க,

---

(21) 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂𑌭𑍂𑌯𑌃 𑌶𑍃𑌣𑍁𑌮𑍇𑌪𑌰𑌮𑌂𑌵𑌚𑌃 ।
𑌇𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑌿𑌮𑍇𑌦𑍃𑌢𑌮𑌿𑌤𑌿 𑌤𑌤𑍋𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑍇𑌹𑌿𑌤𑌮𑍍 ॥

ஸர்வகுஹ்யதமம்பூய: ச்ருணுமே பரமம்வச:
இஷ்டோஸிமேத்ருடமிதி ததோவக்ஷ்யாமிதேஹிதம்

(22) 𑌮𑌨𑍍𑌮𑌨𑌾𑌭𑌵𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁 ।
𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿𑌸𑌤𑍍𑌯𑌂𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍇𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌸𑌿𑌮𑍇 ॥

மந்மநாபவமத்பக்தோ மத்யாஜீமாம் நமஸ்குரு
மாமேவைஷ்யஸிஸத்யந்தே ப்ரதிஜாநேப்ரியோஸிமே.

அவை நாசகங்களென்றும், ஸ்வரூப விரோதிகளென்றும் நினைத்து, சோகாவிஷ்டனான அர்ஜுனனைக்குறித்து அவனுடைய சோக நிவர்த்யர்த்தமாக இனி இதுக்கவ்வருகில்லை யென்னும்படியான சரமோபாயத்தை யருளிச்செய்கையாலே சரமசுலோகம் என்று இதுக்குப் பேராயிருக்கிறது” என்று அருளிச்செய்தார். இதன் பொருளாவது:— கர்மயோகம் ஜ்ஞானயோகம் பக்தியோகமென்கிற மோக்ஷஸாதனங்களான வெல்லாத் தருமங்களையும் என்னுடைய ஆராதனரூபமாக மிகுந்த அன்போடு உன் அதிகாரத்திற்குத் தக்கவாறு செய்துகொண்டு பலனையும் கர்மத்தையும் கர்த்திருத்வத்தை விட்டு ஆராத்யஸ்வரூபனான என்னையே பலனாகவும் உபாயமாகவும் நினைக்கக்கடவாய். இப்படியிருக்கிற உன்னை என்னை யடைதற்கு விரோதிகளாய் அநாதிகாலம் ஸம்பாதிக்கப்பட்டவையான எல்லாப் பாபங்களினின்றும்விடுவிக்கிறேன். ஆகையால் நீ சோகிக்கவேண்டா என்பதாம். இதற்கு மற்றொரு பொருளும் உரைக்கப்பட்டுளது. அது வருமாறு:—

(அ-கை) ஸகலபாபங்களினின்றும் விடுபட்டு எம்பெருமானுக்கே மிகவுமினியனாயிருக்கிற புருஷனுக்கே பக்தியுண்டாகுமாகையால் அந்தப் பக்தியை ஆரம்பிக்கவொட்டாமல் விரோதிக்கின்ற பாபம் அளவற்றிருக்கையாலே, அவைகளை யொழிக்கும் பிராயச்சித்தங்களான தருமங்களை எத்தனைகாலம் அநுஷ்டித்தாலும் ஒழிப்பதரிதாகையாலே, அர்ஜுனன் தனக்குப் பக்தியோகத்தை ஆரம்பிக்கும்படியான யோக்யதையில்லையென்று நினைத்துச் சோகிக்க, அந்தச் சோகத்தைப் போக்குவதற்கு அருளிச்செய்கிறான்.

பக்தியோகத்தை ஆரம்பிக்கவொட்டாமல் விரோதிக்குமவைகளாய் பலவிதங்களாய் அநந்தங்களாயுள்ள பாபங்களுக்குத் தக்க பிராயச்சித்தரூபங்களாயும், கிருச்சிரம் சாந்திராயணம் முதலிய விரதங்களாயும் எத்தனை காலம் ஜீவித்திருந்து அநுஷ்டித்தாலும் அநுஷ்டிக்க வரியவைகளாயுமிருக்கின்ற ஸர்வதர்மங்களையும்விட்டு, பக்தியோகாரம்பம் ஸித்திப்பதற்காக, பரமகாருணிகனாய் எல்லோருக்கும் புகலாய் ஆசிரிதரிடத்திலுண்டான வாத்ஸல்யத்துக்குக் கடலா

யிருக்கிற என்னையே சரணமாகப்பற்று. நான் உன்னைக் கீழ்ச்சொன்ன பக்தியோகாரம்பத்துக்கு விரோதிகளான பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்; என்பதாம்.

இந்தக் கீதாசாஸ்திரத்தில் இந்தச் சரமசுலோகமே பரமார்த்தத்தைத் தெரிவிப்ப தென்பதறிந்து நம்பூர்வாசார்யர்கள் பலவ்யாக்யானம் செய்துள்ளார்கள். அவற்றில் இதன்பொருளின் விசேஷங்களைத் தெளிவாகக்கண்டு கொள்க.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(228-ம் பக்கத்தொடர்ச்சி.)

(டுக) யக்ஷ:- 𑌕𑍋𑌽𑌤𑌿𑌥𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌂 ।
𑌅𑌮𑍃𑌤𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌰𑌾𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ॥

கோதிதி:ஸர்வபூதாநாம் கிம்ஸ்வித்தர்மம் ஸநாதநம்
அம்ருதம் கிம்ஸ்வித்ராஜேந்த்ர கிம்ஸ்வித்ஸர்வமிதம் ஜகத்

(இ-ள்) எல்லாவுயிர்க்கும் விருந்தாவது யாது? பழமையான தர்மம் எது? அரசனே! அம்ருதமென்பதெது? இந்தவுலகனைத்தும் எதுவாக விருக்கும்? எ-ம்.

தர்ம:- 𑌅𑌤𑌿𑌥𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑍋𑌮𑍋 𑌗𑌵𑌾𑌮𑍃𑌤𑌂 ।
𑌸𑌨𑌾𑌤𑌨𑍋𑌽𑌮𑍃𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ॥

அதிதி:ஸர்வபூதாநாம் அக்நிஸோமோகவாம்ருதம்
ஸநாதநோம்ருதோதர்ம: வாயு:ஸர்வமிதம்ஜகத்.

(டுக) இத்தகைய தர்னமானது சித்த சுத்தியின் வாயிலாக நற்கர்மங்களில் முயற்சியை உண்டுபண்ணு மென்பதறியாலாயிற்று. இனி, நற்கர்மங்களுட் சிறந்தது இன்னதென்பதும், அதனாற் பெறத்தக்க பயன் இன்னதென்பதும் உரைக்கப்படுகின்றன.

(இ-ள்) 38 எல்லாவுயிர்க்கும் விருந்தாயிருப்பது அக்னியாம். (39) ஆவின்பாலாகிய ஸோமமே பழமையான தர்மமாம். (40) பழமையான தர்மமே அம்ருதமாம். (41) இவ்வுலகனைத்தும் வாயுவாயிருக்கும்; எ-ம்.

---

(38) இங்கு அக்னி என்றது ஆஹவநீயம், கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி என்ற மூன்றையும் குறித்து நின்றது. தேவதைகளைக் குறித்துத் தன்னிடத்தில் ஆகுதிசெய்யும் அவியை அந்தந்தத் தேவதையிடத்திற்கொண்டு செலுத்தி அதன்மூலமாக அவர்களைத்திருப்திசெய்வித்து யாவர்க்கும் இன்றியமையாத் துணையாயிருக்கின்ற இந்த மூன்று அக்னிகளையும் விருந்தினரைப்போல ஒவ்வொருவரும் தினந்தோறும் உபாஸிக்கவேண்டுமாதலால் 'எல்லாவுயிர்க்கும் விருந்தாயிருப்பது அக்னியாம்' என்றுரைக்கப்பட்டது. இங்கு எல்லாவுயிர்க்கும் என்றதனால் மறையோர்களேயன்றி ஏனையோரும் அவரவருக்குத் தக்கமுறையானே இக்கார்யத்தை நிறைவேற்றலாமென்பது பெறப்படும்.

(39) பழமையான தர்மமாவது-எப்பொழுதும் ஒழியாது செய்யத்தக்க நித்யமான தர்மமாம். வேள்விகளில் ஸோமரஸத்திற்குப் பதிலாக உபயோகப்படுத்தும் பொருள்களுட்சிறந்தது ஆவின்பாலாதலால் இங்கு 'ஆவின்பாலாகிய ஸோமம்' என்றுரைக்கலாயிற்று. அந்த ஸோமம், இங்கு அதனாற் செய்யப்படும் ஆகுதியைக் குறித்து நின்றது. ஆவின்பாலைக்கொண்டு ஆகுதி முதலியவற்றைச்செய்து மூன்று அக்னிகளை உபாஸித்தலாகிய தர்மமே பயன்கருதாது யாவராலும் எப்போதுஞ் செய்யத்தக்க சிறந்த தர்மமாதலால் 'ஆவின்பாலாகிய ஸோமமே பழமையான தர்மமாம்' என்று கூறப்பட்டது. இங்கு ஸாதனமான ஆவின்பால் ஸாத்யமான தர்மமாக உபசரிக்கப்பட்டது.

(40) அம்ருதமாவது-மோக்ஷமாம். அது, இங்கு மோக்ஷத்திற்கு இன்றியமையாத ஸாதனமாவதெதுவோ அதைக்குறித்து நின்றது. பயன்கருதாது எப்பொழுதும் யாவராலும் செய்யத்தக்க அக்னியின் உபாஸனையானது மோக்ஷத்தைப்பயந்தே விடுமாதலால் 'பழமையான தர்மமே அம்ருதமாம்' என்று சொல்லப்பட்டது. இதனால் அக்னியை உபாஸிப்பவர்கள் ஜீவன்முக்ததசையை யடைந்து முடிவில் ஸாயுஜ்யபதவியைப் பெறுவர்களென்பது பெறப்பட்டது.

(41) இங்கு வேள்வியைக்குறித்து உணர்த்திவருகிற பிரகரணமாதலால் உலகனைத்தும் என்பது "உலகமென்பது உயர்ந்தோர் மேற்றே" என்றபடி அக்னியின் உபாஸனையை மேற்கொண்டு ஜீவன்முக்ததசையை யடைந்த உயர்ந்தோரனைவரையும் சுட்டிநின்றது. இப்பெரியார் "வாயொரெவஸா யுஜ்யமுபைதி" "வாயோரேவஸாயுஜ்ய முபைதி" என்று சுருதியிற்

(௪௨) பக்ஷ:- 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌕𑍋𑌵𑌿𑌚𑌰𑌤𑍇 𑌜𑌾𑌤𑌃 𑌕𑍋𑌜𑌾𑌯𑌤𑍇 𑌪𑍁𑌨𑌃
𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌸𑍍𑌯 𑌭𑍈𑌷𑌜𑍍𑌯𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑌾𑌵𑌪𑌨𑌂 𑌮𑌹𑌤𑍍॥

கிம்ஸ்விதேகோவிசரதே ஜாத: கோஜாயதே புந:
கிம்ஸ்வித் ஹிமஸ்ய பைஷஜ்யம் கிம்ஸ்விதாவபநம் மஹத்

(இ-ள்) தனியே ஸஞ்சரிப்பது எது? பிறந்ததெது மறுபடியும் பிறக்கிறது? பனிக்கு மருந்து யாது? விதைப்பதற்குரிய சிறந்த ஸாதனம் என்ன? எ-ம்.

தர்ம:- 𑌸𑍂𑌰𑍍𑌯 𑌏𑌕𑍋𑌵𑌿𑌚𑌰𑌤𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌪𑍁𑌨𑌃।
𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌹𑌿𑌮𑌸𑍍𑌯 𑌭𑍈𑌷𑌜𑍍𑌯𑌂 𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌵𑌪𑌨𑌂 𑌮𑌹𑌤𑍍॥

ஸூர்ய ஏகோவிசரதேசந்த்ரமா ஜாயதே புந:
அக்நிர் ஹிமஸ்ய பைஷஜ்யம் பூமிராவபநம் மஹத்.

(இ-ள்) (42) தனியே சஞ்சரிப்பவன் ஸூர்யனும். (43) சந்

கூறப்பட்டபடியே உலகனைத்தையும் வ்யாபித்திருக்கிற வாயுவின் ஸாயுஜ்யத்தைப்பெற்று முடிவில் ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தையும் பெறுகிறானாதலால் 'உலகனைத்தும் வாயுவாயிருக்கும்' என்று சொல்லப்பட்டது. இதனால் ஜீவன், அக்னியின் உபாஸனையாகிய நற்கர்மத்தைச்செய்து வாயுரூபத்தைப்பெற்று அதன்மூலமாக மோக்ஷத்தைப் பெறுகிறானென்பது பெறப்படும்.

(௪௨) முற்கூறியவாறு வாயுரூபத்தைப் பெற்றவன்பின்னர் எத்தன்மையனாகின்றானென்பதும், அவன் ஜீவன்முக்ததசையை யடைந்திருந்த காலத்து அவனுக்கு உலகத்தோடுறவு எவ்வாறிருக்குமென்பதும், அதை ஒழிப்பதற்குச் சாதனமின்னதென்பதும் இதனாற் சொல்லப்படுகின்றன.

(42) இங்கு ஸூர்யனென்ற சொல் சித்ஸ்வரூபனான ஆத்மாவையுணர்த்தும். அவன் ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி அவஸ்தைகளிலும் அவற்றைக் கடந்துநிற்கும் முக்ததசையிலும் ஒரே தன்மையினனாய், தன்னையறிகைக்குப் பிறிதொரு சகாயமின்றித் தன்னைத் தானேயறியும் ஸ்வயம் ப்ரகாசனாய் எல்லாவிடத்தும் ஒருபடியாய்ப் பிரகாசிக்கின்ற ஸூர்யனைப்போல விளங்குகின்றானாதலால் 'தனியேசஞ்சரிப்பவன் ஸூர்யனும்' என்றுரைக்கப்பட்டது. இதனால் முன்னர்க் கூறப்பட்ட வாயுஸ்வரூபத்தைப் பெற்றவன் முக்ததசையில் இயல்பாயுள்ள தன் ஸ்வரூபம் ப்ரகாசிக்குமென்பது பெறப்பட்டது.

(43) இங்கு, சந்திரனென்பது உவமையாகுபெயராய்ச் சந்திரன் போன்ற தன்மையுடைய மனதைக்குறித்து நின்றது. சந்திரன் அபரபக்ஷத்

திரன் மறுபடியும் மறுபடியும் பிறக்கிறான். (44) பனிக்கு மருந்து அக்னியாம். (45) விதைப்பதற்குரிய சிறந்த ஸாதனம் பூமியாம்; எ-ம்.

தொடரும்.

தில் க்ஷீணதசையடைந்து பூர்வபக்ஷத்தில் வளர்ச்சியுறுவதுபோல ஜீவன்முக்தன் ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெற்றவிடத்து ஒழிவடைந்துநின்ற அவனுடைய மனமானது பூர்வவாஸனையால் மறுபடியும் இதரவிஷயங்களைப் பற்றி வெளிப்படுமாதலால் 'சந்திரன் மறுபடியும் மறுபடியும் பிறக்கிறான் என்றுரைக்கப்பட்டது. ஜீவன்முக்தனுக்குச் சரீரசம்பந்தமுள்ளவரை அவன் பூர்வவாஸனையால் தூண்டப்பெற்றுச் சிற்சிலசமயங்களில் அவித்தையின் வயப்படுதலுமுண்டு. அதனால் அவனிடத்தில் முன்பு ஒழிவடைந்துநின்ற மனமானது வெளிப்பட்டு உலகத்தின் உறவைப்பிறப்பிப்பதாகிய தனது காரியத்தைச்செய்கிறது. இது, இவனுடைய ஸ்தூலஸூக்ஷ்ம சரீரங்கள் ஒழிந்த பின்புதான் ஒழியும். அதன்மேல் இவன் நித்யமுக்ததசையைப் பெறுகிறானென்பது கருத்து.

(44) இந்தப் பனியென்றது பனியின் தன்மையுடைய அவித்தியை. பனியானது ஸூர்யனை மறைப்பதுபோல அவித்தையானது சித்ஸ்வரூபனை ஆத்மஸ்வரூபத்தை மறைக்குமியல்பினதாயிருக்கும். அக்னி என்ற சொல் ஜ்ஞானத்தை உணர்த்துகின்றது. ஜ்ஞானஒளியால் அஜ்ஞானமாகிய அந்தகாரமகன்றுவிடுமாதலால் 'பனிக்கு மருந்து அக்னியாம்' என்று சொல்லப்பட்டது.

(45) இங்கு, பூமி என்றது சரீரத்தை. க்ருஷி செய்வதற்கு எவ்வாறு பூமி சிறந்த ஸாதனமாக விருக்கின்றதோ அவ்வாறே மோக்ஷத்தையடைவதற்குரிய முயற்சிசெய்வதற்குச் சரீரம் சிறந்த ஸாதனமாயிருக்குமாதலால் 'விதைப்பதற்குரிய சிறந்த ஸாதனம் பூமியாம்' என்று சொல்லப்பட்டது. "𑌶𑌰𑍀𑌰𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌧𑌰𑍍𑌮𑌸𑌾𑌧𑌨𑌂" "சரீரமாத்யம் கலு தர்மஸாதநம்" (சரீரமானது தர்மத்திற்கு முதற்காரணமாம்.) என்று ஆன்றோருரைத்ததும் ஈண்டறியத்தக்கது.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது]

(236-ம் பக்கத்தொடர்ச்சி.)

உபய ஸம்ப்ரதாயங்களிலும் ப்ரதம பர்வாபேக்ஷயா சரமபர்வமே உத்க்ருஷ்டமென்பது ஸ்பஷ்டம்.

(1) "𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌵𑌾 𑌨𑍇𑌤𑌿 𑌸𑌂𑌶𑌯𑍋𑌽𑌚𑍍𑌯𑍁𑌤𑌸𑍇𑌵𑌿𑌨𑌾𑌮𑍍
𑌅𑌸𑌂𑌶𑌯𑌸𑍍𑌤𑍁 𑌤𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾𑌰𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍"

(2) "𑌮𑌮 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍"

(3) "𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌗𑍁𑌰𑍁𑌰𑍇𑌵 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃"

"ஸித்திர்ப்பவதி வா நேதி ஸம்சயோச்யுதஸேவிநாம்
அஸம்சயஸ்து தத்பக்த பரிசர்யாரதாத்மநாம்"
"மமமத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகாபவேத்"
"குருரேவ பரப்ரஹ்ம குருரேவ பராகதி:"
இத்யாதிகள் ப்ரமாணங்களாகும்.

இவைகளுக்கு அர்த்தம், (1) ப்ரதமபர்வமான ஸர்வேசுவரனை ஆசிரயித்தவர்களுக்கு மோக்ஷஸித்தியில் சம்சயமுண்டாகும். எனெனில் ஸர்வேசுவரன் ஸ்வதந்த்ரனுகையாலும் ப்ரபல ப்ரதிபந்தகமான ப்ரஹ்மவிதபசாரம் நேருகைக்கு ஸம்பாவனையுண்டாகையாலும், பல ஸித்தியில் கண்ணழிவுண்டு. அப்படியன்றிக்கே சரமபர்வம் ஸ்வாதந்த்ரிய கந்தமன்றியிலே அநுக்ரஹைகசீலமாயிருக்கிறபடியாலும், ப்ரஹ்மவித்தினுடைய கௌரவஜ்ஞாநபூர்வகமாக ஆசிரயித்தபடியால் ப்ரஹ்மவித்தினுடைய அபசாரத்துக்கு ப்ரஸக்தியில்லாமையாலும், பலஸித்தியில் கண்ணழிவில்லை என்றும்,

(2) என்னுடைய பக்தர்களிடத்திலுங்காட்டில், என்னுடைய பக்தபக்தர்களிடத்தில் எனக்கு ப்ரீதி அதிசயிதமாயிருக்கும் என்றும்;

ஆசார்யனே பரம்ப்ரஹ்மம் என்றும், ஆசார்யனே பரமோபாய மென்றுமாம்.

ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வார் திருவாய்மொழியில், "பயிலுஞ்சுடரொளி" "நெடுமாற்கடிமை" என்னுமிவற்றில், சரமபர்வமே ப்ராப்ய ப்ராபகமாக வருளிச்செய்தார்.

திருமங்கையாழ்வார், "மற்றுமோர்தெய்வமுளதென்றிருப்பாரோடுற்றிலேன்" என்கிற பாசுரத்தில், திருமந்த்ரத்துக்குப் பரம தாத்பர்யம் பாகவத கைங்கர்ய மென்றருளிச்செய்தார்.

இத்தை அநுஸரித்தே "நண்ணுதவாளவுண" ரிலும், "கண் சோரவெங்குருதி"யிலும் சரமபர்வத்தினுடைய ப்ராப்யத்வ ப்ராபகத்வங்கள், பாவநத்வ போக்யத்வங்கள் இவைகளை அருளிச்செய்தார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் "நின்னடியார்க் காட்படுத்தாய் பள்ளி யெழுந்தருளாயே" என்று பாகவதசேஷத்வத்தைப் புருஷார்த்தமாக ப்ரார்த்தித்தார்.

திருப்பாணாழ்வார், "அடியார்க்கென்னையாட்படுத்தவிமலன்" என்றருளிச் செய்தார்.

திருமழிசையாழ்வார், "மாறுபதானவனை" என்கிற பாட்டில், "மற்றவரைச்சாத்தியிருப்பார்தவம்"என்று ப்ரதமபர்வநிஷ்டர்களைக் காட்டிலும் சரமபர்வநிஷ்டரே உத்க்ருஷ்டரென்று அருளிச்செய்தார்.

ஆண்டாள், "நல்லவென்றோழிநாகணைமிசைநம்பரன்" என்கிற பாட்டில், தனக்குப் பெரியாழ்வார் ஸம்பந்தமே உத்தாரகமென்று அருளிச்செய்தார்.

மதுரகவிகள், ஆழ்வாரையே ப்ரதமபர்வமான பகவத்விஷயத்திற்காட்டிலும் ப்ராப்யத்வ, ப்ராபகத்வ, பரதேவதாத்வ, போக்

யத்வ, பாவநத்வாதி குணவிசிஷ்டராக அத்யவஸித்து, 'கண்ணி நுண்சிறுத்தாம்பு' என்கிற பிரபந்தத்தை அருளிச்செய்தார். அதில் "தேவுமற்றறியேன்" என ஆழ்வாரைத்தவிர வேறு தெய்வத்தை அறியேன் என்று அருளிச்செய்தார். இப்பிரபந்த மொன்று கொண்டே சரமபர்வம் உத்கிருஷ்டமென்று அறுதியிடலாம்.

வேதோபப்ரஹ்மணமாய், இதிஹாஸ சிரேஷ்டமாயுள்ள ஸ்ரீராமாயணத்தில், ஸ்ரீசத்ருக்நாழ்வான் ராமாநுவ்ருத்தியை விட்டு சரமபர்வமான பரதாழ்வானுடைய அநுவ்ருத்தியே தமக்குப் பரமபுருஷார்த்தமாக அத்தியவஸித்து ப்ரதமபர்வத்தைக் கணிசியாதிருந்தார். இந்த பரதாநுவ்ருத்தியை விசேஷ தர்மமாக நம்மாசார்யர்கள் அறுதியிட்டிருக்கிறார்கள்.

இனி, ஆசார்யர்களில் ஆளவந்தார், "தவதாஸ்ய ஸுகைக ஸங்கிநாம்" "தவதாஸ்ய ஸுகைக ஸங்கிநாம" என்கிற சுலோகத்தில் சரமபர்வபூதர்களான பாகவதர்களுடைய திருமாளிகைகளில் அன்றே பிறந்து அன்றே வளர்ந்து அன்றே நசிக்கும்படியாயிருக்கையாலே திருமாளிகை ஸம்பந்த விச்சேதப்ரஸக்தியன்றிக்கே இருக்கும் கீடஜன்மமே தமக்குப் புருஷார்த்தமென அறுதியிட்டார். பின்னும் "பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய" "பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய" என்று வித்யையாலும் ஜந்மத்தாலும் தமக்கு பிதாமஹராயிருக்கிற நாதமுனிகள் ஸம்பந்தமே உத்தாரகமாக அத்யவஸித்து, அந்த ஸம்பந்தத்தையே பார்த்து என்னுடைய அபராதத்தைக் கணிசியாமல் கிருபைபண்ணியருளவேணுமென்று எம்பெருமானை ப்ரார்த்தித்தார். ஸர்வஸங்கபரித்யாகம் பண்ணின ஆசிரமத்திலிருந்தும் ஜ்ஞானாதிகருடைய திருமேனி ஸம்பந்தமே உத்தேசியம் என்பது தோன்ற "பிதாமஹம்" என்று ஸாதித்தார்.

திருவரங்கத்தமுதனார், பாஷ்யகாரரையே ப்ரதமபர்வாபேக்ஷயா தமக்கு உத்தேசியமாக அத்தியவஸித்து தம்முடைய அத்தியவஸாய விசேஷத்தை அநேக பாசுரங்களால் வெளியிட்டார்.

ஆழ்வானும் 'ராமாநுஜாங்கிரி சரணோஸ்மி' என்கிற சுலோகத்தாலே ஸ்ரீபாஷ்யகார ஸம்பந்தமே உத்தாரகமென்றருளிச்செய்தார்.

வடுகநம்பி, எம்பெருமானரையே ப்ராப்ய ப்ராபகமாக அத்திய வஸித்திருந்தமை ஸுஸ்பஷ்டம்.

முதலியாண்டான் பாஷ்யகார ஸம்பந்தமே தமக்கு உத்தாரகமென்று அத்தியவஸித்த விஷயத்தை "ஒருமலையில் நின்றும்," என்று தொடங்கிய முதலியாண்டான் பாசுரங்கொண்டறியலாம்.

பட்டர், 'தவஹரோஹ கோவஷிஹி யாதிஷு கெஸ்ரூபண தீத்வவி வாசமுதீரயம்' "தவபரோஹ மகார்ஷிஹி தார்மிகை: சரணமித்யபி வாசமுதீரயம்" என்று ஆசார்யநிஷ்டையே தமக்கு உபாதேயமென்று அருளிச்செய்தார்.

லோகதேசிகனும், ஸ்ரீ வசன பூஷண திவ்யசாஸ்திரத்தில் "ஆசார்யாபிமானமே உத்தாரகமென்பது வேதபரமதாத்பர்ய" மென்று அறுதியிட்டு, 'வேதார்த்தம்' என்று தொடங்கி 'ஆசார்யாபிமானமே உத்தாரகம்' என்று நிகமித்தருளினர்.

வேதாந்ததேசிகனும் ரஹஸ்யத்ரயஸாரத்தில், ஆசார்யநிஷ்டையை நிபுணகிருத்தியமென்று அருளிச்செய்ததுமன்றி, மற்ற இடங்களிலும் 'த்வயாவாரோ விதிநிஹிதஹா' "த்வய்யாசார்யைர் விநிஹிதபரா" என்று தொடங்கி 'ஸந்ரயொஷேஷஹாம்' "ஸந்ரயோ மேஸ்வதந்தாம்" என்று ஆசார்யநிஷ்டர்களைத் தமக்கு போக்கியமாக அநுஸந்தித்தார். தமக்கும் ஆசார்யநிஷ்டையை, 'வந்நரஜீத உவாயயெஷ:' 'புநருக்த உபாயமேயஷ:' என்று வெளியிட்டார். பின்னையும், 'வளவுரை தந்தவனருளே மன்னிய மாதவத்தோர்' என்று ஆசார்யநிஷ்டர்களை மஹா தபஸ்விகளென்று கொண்டாடியிருக்கிறார். இன்னமும், 'இன்பத்தில் இறைஞ்சுதலில்' என்கிறபாட்டில், 'அன்பர்க்கே அவதரிக்கும் ஆயனிற்க' என்று ப்ரதமபர்வமான ஈசுவரனைக்காட்டிலும் போக்யத்வாதிகளான குணங்கள் ஆழ்வார்க்கே யுள்ளதென்று கண்ணிநுண்சிறுத்தாம்பின் அர்த்தத்தை வெளியிட்டு உத்தேசிய விரோதி பாபமாகையாலே ஆழ்வார் திருவடிகளில் ப்ராவண்யத்துக்கு விரோதியான பகவத்ப்ராவண்யத்தைத் துன்பமாகவும் அந்தத் துன்பமற்றிருக்கிற மதுரகவிகளால் வெளியிடப்பட்ட புராதனமான சரமபர்வாபிமா

னமே நல்வழியான ப்ரபத்தியில் விசுவாஸமுள்ளவர்களுக்கு உபாதேயமென்னுமதை யருளிச்செய்தார். இப்படி ஆசார்யநிஷ்டைக்கு ஆதிக்யஸூசகமான வேதாந்ததேசிகனது ஸூக்திகள் பலவுள. அவையெல்லாம் விஸ்தரபயத்தால் இங்கு விடவேண்டிற்று.

மணவாளமாமுனிகளும் ஆர்த்திப்ரபந்தத்தில் இவ்வர்த்தத்தை அருளிச்செய்தார். "𑌅𑌨𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌣𑍀𑌯𑌂 𑌹𑌿 𑌚𑌰𑌗𑍍𑌰𑌹𑌣𑌂" "அநதிக்ரமணீயம் ஹிசரக்ரஹணம்" என்கிறபடியே ஈசுவரனுக்கு சரணஸ்தாநீயர்களான ஆசார்யர்களுடைய வரணம் ஈசுவரனுக்கு அநதிக்ரமணீயமாம். ஆகையால் ப்ரதமபர்வமான பகவத்ஸமாசிரயணத்துக்குப் பல ஸித்தியில் கண்ணழிவுண்டேயாகிலும், ஆசார்ய ஸமாசிரயணத்துக்குக் கண்ணழிவு சொல்ல வழியில்லை.

இப்படி இருந்துள்ள ஆசார்யநிஷ்டனுக்கு ஆசார்யமுகோல்லாஸமே புருஷார்த்தமாகையால் ததர்த்தமாக நித்யநைமித்திகாதி கர்மங்கள் அவசியம் அநுஷ்டேயங்கள். எல்லா அதிகாரிகளுக்கும் நிஷித்தவர்ஜநம் ஆவசியகம்.

தொடரும்.

ஸ்ரீ:

நூற்றெட்டுத்திருப்பதியகவல். *

[இந்த அகவற்பா, இராமநாதபுரம் சதாவதானம் முத்துஸ்வாமி ஐயங்கா ரென்ற அனந்தாழ்வான் ஸ்வாமியால் அருளிச்செய்யப்பெற்றது.]

உலகுயபரங்கமுறையூர்தஞ்சை
அன்பில்கரம்பனூராதனூர்வெள்ளறை
கண்டியூராழுந்தூர்கவித்தலம்புள்ளம்
பூதங்குடிசிறுபுலியூர்குடந்தை

---

* இந்த அகவற்பாவில் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாஸநஞ் செய்யப்பெற்ற நூற்றெட்டுத் திவ்யதேசங்களின் திருநாமங்களும் பிரசித்தமான ஆறுபுராண ஸ்தலங்களின் பெயரும் அடங்கியுள்ளன.

௫. திருவிண்ணகரந்திருத்தலைச்சங்க
நாண்மதியந்திருப்பேர்நகர்திருச்சேறை
வெள்ளியங்குடியரிமேயவிண்ணகரம்
வண்புருடோத்தமமாவிந்தையூர்
சித்திரகூடஞ்சிராமவிண்ணகரம்

௧0. காவளம்பாடிகண்ணமங்கை
நந்திபுரவிண்ணகரநாகையிந்தளூர்
கண்ணங்குடி திருக்கண்ணபுரமணி
மாடக்கோயில்வைகுந்தவிண்ணகரம்
கூடலூர்வெள்ளக்குளமணிக்கூடம்

௧௫. தேவனூர்தொகைதிருத்தெற்றியம்பலம்
செம்பொன்செய்கோயில்திருப்பார்த்தன்பள்ளி
சோழநாட்டிடைமறைசொற்பதிநாற்பதின்
மாலிருஞ்சோலைவரகுணமங்கை
புல்லாணிமெய்யம்புளிங்குடிமோகூர்

௨0. குருகூர்கோட்டிகூடல்வைகுந்தம்
குளந்தைகுறுங்குடிகோளூர்புநவை
தொலைவில்லிமங்கலந்தூய்த்திருப்பேரை
சீவரமங்கைதிருத்தண்காலூர்
பாண்டிநாட்டிடைவாழ்பதிபதினெட்டின்

௨௫. போற்றுமனந்தபுரம்புலியூர்செங்
குன்றூர்வித்துவக்கோடுமூழிக்
களம்வண்பரிசாரங்காட்கரைநாவாய்
வாறன்விளைவண்வண்டூர்வல்லவாழ
திருக்கடித்தானந்திருவாட்டாறு

இன்னும் இவ்வகவற்பா யாவரும் எளிதாய் மனனஞ் செய்வதற்கேற்ப அமையப்பெற்றுளது. இராமநாதபுரம் முதலியவிடங்களில் இதைப் பல ஸ்ரீவைஷ்ணவர்கள் கண்டபாடஞ்செய்து நித்யாநுஸந்தானஞ் செய்து வருகின்றனர். அங்ஙனமே இது இன்னும் பலருக்கும் அநுஸந்தான யோக்யமாயிருக்குமென்று ஈண்டுவெளியிடலாயிற்று.

௩௦. பகர்மலைநாட்டிடைப்பதிபதின்மூன்றின்
திருவகீந்திரபுரந்திருக்கோவலூர்நடு
நாட்டிடையிரண்டுநலந்தருபதியின்
அத்திமாமலையூரகந்திருத்தண்கா
புட்குழிபட்டபுயங்கநீரகம்

௩௫. காரகம்வெஃகாகள்வனூர்பாடகம்
நின்றவூரெவ்வுளூர்நிலாத்திங்கட்டுண்டம்
திருவேளுக்கைதிருக்கார்வானம்
பவளவண்ணம்பரமேச்சுரவிண்ணகரம்
திருவிடவெந்தைதிருக்கடன்மல்லை

௪௦. அல்லிக்கேணிவளர்திருக்கடிகை
நீர்மலைதொண்டைநெடுநாட்டிடையின்
இன்புறும்பதிகளிருபத்திரண்டின்
வேங்கடஞ்சிங்கவேள்குன்றமயோத்தி
தேங்கியவதரியாச்சிரமநைமி

௪௫. சாரணியப்பிரிதிசாளக்கிராமம்
கங்கைக்கரைவாழ்கண்டந்திருவாய்ப்
பாடிதுவாரகைபாற்கடல்மதுரை
வடநாட்டிடையின்மன்னியபதிகள்
பத்துடனிரண்டிற்பரமபதமெனுந்

௫௦. திருநாடொன்றிற்சேர்த்துநூற்றெட்டில்
யதிபதியருளாவிபற்றியதிருநா
ராயணபுரந்திருராசமன்னார்கோயில்
மன்னியவிருந்தாவனம்பெரும்பூதூர்
மெய்ப்புகழ்ப்பாபவிநாசஞ்சீர்முட்டம்

௫௫. புராணநூற்றலங்கள்போற்றுமோராறின்
உலகிடைமற்றுளவோங்கியபதியின்
மலர்மகளுடனேமன்னியதிருமால்
எழையேனுளத்திலிருந்திங்
கூழியினழியாவுலகளித்திடவே.

நூற்றெட்டுத்திருப்பதியகவல் முற்றிற்று.